மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரத்தில் என்ன கேள்வி கேட்கப்படுகிறது என்பதை உறுப்பினர்கள் தெரிந்து கொண்டு கேள்வி கேட்கவேண்டும். உறுப்பினரவர்கள் காமராஜர் சாலை, அடையாறு பாலம் என்றெல்லாம் போய்விட்டால் அது கன்னியாகுமரி வரைக்கும்கூடப் போய்விடும். எனவே, சம்பந்தப் பட்ட கேள்விகளாக இருந்தால் துணைக்கேள்விகள் வரவேற்கப் படுகின்றன.

திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த அவையில் அமைச்சர்கள் தெரிவிக்க விரும்புகின்ற சில பிரச்னைகளைத் திடீரென்று கேள்விகளாக உருவாக்கி, அமைச்சர்கள் தெரிவிக்கின்ற நிலைமை ஏற்படுவதாக இதற்குமுன்பே ஒருமுறை சுட்டிக் காட்டியிருக்கிறேன். அப்படி அமைச்சர்களின் வசதிக்காகக் கேள்விகள் எழுப்பப்பட்டால் சபாநாயகரவர்கள் முதலிலேயே அதைத் தடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நகராட்சிகள்—ஊராட்சி ஊழியர்களுக்கு சம்பளம் வழங்கல்.

*குறுகிய கால வினா எண். 17—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ). தமிழ்நாட்டில் பல நகராட்சிகள் மற்றும் ஊராட்சிகள் தங்களது ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க முடியாமல் உள்ள நிலை அரசுக்குத் தெரியுமா?

(ஆ) அப்படிப்பட்ட நிலைக்கு காரணமென்ன?

(இ) அதை சீர்திருத்த அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :—(அ) குடியாத்தம், பெரியகுளம் நகராட்சிகளிடமிருந்தும், நங்கவரம் பேரூராட்சி யிலிருந்தும் இவ்வித நிதி பற்றாக் குறைபற்றி அரசுக்கு கோரிக்கைகள் வந்துள்ளன.

(ஆ) மற்றும் (இ) 28-6-1980-ம் நாளிட்ட அரசு ஆணையில் குடியாத்தம் நகராட்சிக்கு வழிவகை முன் பணமாக ரூ. 1 இலட்சம் அரசு வழங்கியுள்ளது. இதேபோல், பெரியகுளம் நகராட்சிக்கும், நங்கவரம் பேரூராட்சிக்கும் வழிவகை முன்பணம் கொடுப்பதுபற்றி பரிசீலிக்கப்படும்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, பல நகராட்சி மற்றும் ஊராட்சிகளில் சொத்து வரி பத்தாண்டு களுக்கு மேலாக வசூலிக்கப்படாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு வேண்டிய நடைமுறைகளை அரசு கையாளுமா?

[1980 ஜூலை 15

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு ; தலைவரவர்களே, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் இவைகளிலெல்லாம் கடந்த 10 ஆண்டுகளாக சொத்து வரி, வீட்டு வரி போன்றவைகள் வசூலிக்கப்படாமல் நிலுவையிலே இருந்து கொண்டிருக்கின்றன. அதன் காரணமாகவும், அந்த நகராட்சிகள், ஊராட்சிகளுடைய நிதிநிலை சரியில்லாத காரணத்தாலும், பல வேலைகள் தேங்கிக் கிடக்கின்றன. பல காரணங்களுக்காக, அந்தச் சொத்து வரி, வீட்டு வரி போன்றவைகள் எல்லாம் தள்ளிப் போடப்பட்டு அதன் மூலமாகத்தான் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ஆனாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பொறுப்புகளுக்கு வந்துவிட்டால், அந்தச் சொத்து வரி, வீட்டு வரி போன்றவைகளை வசூலிக்கலாம்.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவரவர்களே, சில ஊராட்சிகளே ஏழை ஊராட்சிகளாக இருக்கின்றன. ஆதலால், ஊழியர்களுக்குச் சம்பளம் கொடுக்கின்ற அளவில் வருமானம் வருகிற மாதிரி ஊராட்சிகளைப் பிரிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா? இல்லையென்றால், ஊராட்சி, நகராட்சி ஊழியர்களை, அரசு ஊழியர்களாக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, ஊராட்சிகளையோ, நகராட்சிகளையோ பிரிக்கும் திட்டம் மத்திய அரசினால் இப்பொழுது தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. 'எலக்ஷன் பான்' என்ற காரணத்திற்காக, வருகிற 30–6–1981 வரையிலே, தடைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, அவைகளையெல்லாம் இப்பொழுது பிரிக்க முடியாத நிலைமையிருக்கிறது. அதே நேரத்தில், எந்தெந்த நகராட்சிகள், எந்தெந்த ஊராட்சி ஒன்றியங்களுக்கு நிதிநிலை சரியில்லாமலிருக்கிறதோ, அவைகளுக்கெல்லாம் நகராட்சிகளுக்காக இருந்தால், ரூ. 7 இலட்சமும் ஊராட்சி ஒன்றியமாக இருந்தால் ரூ. 2 இலட்சமும், ஒதுக்கப்பட்டு, இன்று நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டு இருக்கிறது.

திரு. செஞ்சி ந. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, தற்பொழுது அரசால் மாற்றப்பட்ட சினிமாக் கொட்டகைகளின் வரி விதிப்பின் மூலமாக, எத்தனை பேரூராட்சி மன்றங்களுக்கு, ஊராட்சி ஒன்றியங்களுக்கு சினிமா கொட்டகைகள் வரி மூலமாக வரவேண்டிய வருமானம் குறைந்திருக்கிறது? எத்தனை ஊராட்சிகள் பாதிக்கப்பட்டுள்ளன என்பதை அறிவிக்க இயலுமா? செஞ்சி பேரூராட்சியும் அதிலே அடங்கியிருக்கிறது. ஆகவே, அரசாங்கத்தின் சார்பில் விரிவான அறிக்கையைத் தாக்கல் செய்யுமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. கருப்பையா : தலைவரவர்களே, நங்கவரம் பேரூராட்சியில் 6 மாதங்களுக்கும் அதிகமாக அங்கு வேலை செய்யக்கூடிய சுகாதார சிப்பந்திகள் உட்பட அனைத்து ஊழியர்

1980 ஜூலை 15]

களுக்கும் சம்பளம் வழங்கப்படவில்லை. அதனால், அந்த ஊழியர்கள் வாழ்க்கையை நடத்தமுடியாமல் அவதியுற்றிருக்கிறார்கள். உடனடியாக அவர்களுக்குச் சம்பளம் வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் அமைச்சரிடத்திலே கொடுத்திருக்கிறேன். பஞ்சாயத்து ஒன்றிய நிதியிலிருந்து அவர்களுக்கு உடனடியாக சம்பளம் கொடுப்பதற்கான முறையிலே ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசுக்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளார்கள். அந்தக் கடிதத்தின்படி விதிவிலக்கு அளித்து அதன் மூலமாக, நங்கவரம் பேரூராட்சிக்கு நிதி கொடுப்பதுபற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :- ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்]

2. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

சென்னை நகரில் உணவு பங்கீடு அட்டைகள் வழங்கப் பெறுதல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானம். ''சென்னை நகரத்து மக்களுக்கு ரேஷன் கார்டு வழங்குவதில் கால தாமதம் ஏற்படுவதாலும், பழைய ரேஷன் கார்டுகளைப் புதுப்பிப்பதில் அலட்சியம் காட்டுவதாலும் சென்னை நகர மக்களிடையே ஏற்பட்டுள்ள சிரமமான பதட்டமான நிலை குறித்து விவாதிக்கப் பேரவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்க வேண்டும்'' என்று கேட்டு திரு. அ. ரகுமான்கான் அவர்கள் ஒரு தீர்மானம் கொடுத்துள்ளார். இது எப்படி அவசர முக்கியமானது என்பது குறித்து சுருக்கமாகக் கூறும்படிக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் குறைந்த வருமானம் உடையவர்களுக்கு ரேஷன் மூலம் அத்தியாவசியப் பண்டங்களை கன்ட்ரோல் விலையிலே வழங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால், இப்பொழுது வெளி மார்க்கெட்டிலே அத்தியாவசியப் பண்டங்களுடைய விலை எல்லாம் விஷம் போல் ஏறியிருக்கிறது. தேர்தல் காலத்தில் கூட நம்முடைய முதலமைச்சரவர்கள், ஆட்சியில் நகங்கள் இல்லாத காரணத்தால்தான் அத்தியாவசியப் பண்டங்